மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

(மலர் 48 ✱ சென்னை 31–8–2021 செவ்வாய் மாலை ✱ வெளியூர் 1–9–2021 புதன் ✱ இதழ் 358)

# முன்னாள் மாணவி தொழிலதிபர் ஜெயஸ்ரீ வெங்கட்ராமன் நினைவாக ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் டிஜிட்டல் கல்வி மையம்

## ‘டாபே’ சேர்மன் மல்லிகா சீனிவாசன் துவக்கினார்

சென்னை ஆக.31–

ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் மாணவிகளுக்கு இணைய வழிக் கல்வி நடத்துவதற்கு ஏற்றவாறு டிஜிட்டல் தொழில்நுட்பம் கொண்ட மையம், இதன் பழைய மாணவியும் ஆம்கோ பேட்டரி சேர்மனுமான ஜெயஸ்ரீ வெங்கட்ராமன் நினைவாக நிறுவப்பட்டுள்ளது. இதை ஜெயஸ்ரீயின் சகோதரி ‘டாபே’ நிறுவன சேர்மனுமான மல்லிகா சீனிவாசன் மற்றும் முரளி வெங்கட்ராமன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்த மையம் தகவல் பரிமாற்ற நவீன சாப்ட்வேர் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மாணவிகள் வகுப்பில் படிக்கவும், தொலைதூர இடங்களில் இருந்து ஆன்லைனில் படிக்கவும் வழங்கும் படிப்புகளை நவீன முறையில் வழங்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்று கல்லூரி முதல்வர் ரோஸி ஜோசப் தெரிவித்தார்.

டிராக்டர்ஸ் அண்டு பார்ம் எக்யூப்மெண்ட் லிமிடெட் (TAFE) மற்றும் ஜெயஸ்ரீ வெங்கட்ராமனின் குடும்பத்தினரால் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் “ஜெயஸ்ரீ வெங்கட்ராமன் டிஜிட்டல் கற்றல் மற்றும் ஆராய்ச்சி மையம்” நிறுவப்பட்டுள்ளது.

இந்த மையம் வழங்குவதோடு, இணைய அடிப்படையிலான கற்றல் அலகுகளையும் உருவாக்கும். மேலும் உலகெங்கிலும் உள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறையோடு இணையவழி முறையிலான ஒத்துழைப்புகளை மேம்படுத்தும்.

“ஜெயஸ்ரீ வெங்கட்ராமன் டிஜிட்டல் கற்றல் மற்றும் ஆராய்ச்சி மையம்” என்பது, பல்துறை திறன் வாய்ந்த தகவல் பரிமாற்ற உயர் மென்பொருளைப் பயன்படுத்தி “வகுப்பிலும்” மற்றும் “தொலைதூர அமைவிடங்களிலும்” உள்ள பங்கேற்பாளர்களை ஒருங்கிணைத்து ஆழமான மற்றும் அனுபவ அடிப்படையிலான கற்றலை வழங்கும் ஒரு நவீன மற்றும் மேம்பட்ட தளமாக செயல்படும்.

ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின் முதல்வர் ரோஸி ஜோசப், கல்லூரியின் செயலர் சூசன் மத்திகல், பேராசிரியர்கள், மாணவர்கள், கார்ப்பரேட் மற்றும் தொழில்துறையிலிருந்து வந்திருந்த முக்கிய விருந்தினர்கள் மற்றும் அறிவுசார் பங்குதாரர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

டாபே நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப, புத்தாக்க மற்றும் கற்றல் துறையின் தலைமை அதிகாரி ஷோபனா ரவி, இம்மையத்தின் தொழில்நுட்பத் திறன்கள் மற்றும் செயல்பாடுகளை பகிர்ந்து கொண்டார். ஜெயஸ்ரீ வெங்கட்ராமனுடனான தனது தொடர்பையும், நினைவுகளையும் நெகிழ்வோடு நினைவு கூர்ந்த ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின் முதல்வர் ரோஸி ஜோசப் கூறியதாவது:–



மல்லிகா ஸ்ரீனிவாசன்



ஜெயஸ்ரீ

“ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின் ஒரு சிறப்பான முன்னாள் மாணவி ஜெயஸ்ரீ வெங்கட்ராமன் படைப்புத்திறன், புத்தாக்கம் மற்றும் செயல் நேர்த்தி ஆகியவற்றின் மீது மிகப்பெரிய பேரார்வத்தைக் கொண்ட ஒருமுன்மாதிரிமாணவியாக இருந்தார். அவர் பயின்ற ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியோடு அவர் கொண்டிருந்த ஆழமான பிணைப்பிற்கு சிறந்த சாட்சியாக இந்த உயர் தொழில்நுட்ப மையம் திகழ்கிறது. எதிர்காலத்தில் இங்கு பயிலும் மாணவிகளுக்கு உத்வேகமளிப்பதாக இம்மையம் நிச்சயம் செயல்படும். மிக நவீன டிஜிட்டல் சாதனங்களுடன் மேம்பட்ட ஆடியோ – விஷுவல் தொழில்நுட்பம் கொண்ட இம்மையம், ஜெயஸ்ரீயின் புத்தாக்கத்தையும் மற்றும் படைப்புத் திறன் உணர்வையும் பிரதிபலிக்கிறது. இங்கு கல்வி பயிலும் இளம் மாணவிகளை அவர்களது எதிர்கால வாழ்க்கைப் பாதையில் திறனுடன் முன்னேறிச்செல்ல அவர்களுக்கு கற்பிக்கவும், ஊக்குவிக்கவும் மற்றும் திறமைகள் கிடைக்குமாறும் செய்வது என்ற ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின் பொறுப்புறுதியை வலியுறுத்துவதாகவும் இம்மையம் அமைந்திருக்கிறது என்றார் ரோஸி ஜோசப்’’.

இம்மையத்தின் திறப்பு விழாவில் பேசிய முரளி வெங்கட்ராமன், “இந்த டிஜிட்டல் கற்றல் மற்றும் ஆராய்ச்சி மையத்தை நேரில் பார்த்தால் ஜெயஸ்ரீ நிச்சயமாக பெரிதும் மகிழ்ச்சியடைவார் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், அவர் பேரார்வத்தோடு நம்பிக்கை கொண்டிருந்த லட்சியங்களை உண்மையிலேயே உள்ளடக்கியதாக இம்மையத்தின் குறிக்கோள்களாக இருக்கின்றன. அனைத்துத் துறைகளிலும் சாதனை படைப்பதற்காக இளம் பெண்கள் திறன் அதிகாரம் பெறுவது, அமைப்பு சார்ந்த மற்றும் தனிநபர் மேம்பாட்டிற்கு தொழில்நுட்பத்தை சிறப்பாக செயல்படுத்துவது என்பவையே அந்த இலட்சியங்களாகும். அவரது எதிர்கால தனிப்பட்ட மற்றும் தொழில்முறை சார்ந்த வெற்றிக்கு வலுவான அடித்தளத்தையும், ஊக்கத்தையும் வழங்கியது தான் பயின்ற இந்த கல்லூரிதான் என்று அவர் எப்போதும் கூறுவார்” என்றார்.

### ஜெயஸ்ரீ என்றாலே செயல் நேர்த்தி

டாபே நிறுவனத்தின் சார்பாக இம்மைய தொடக்க விழாவில் உரையாற்றிய மல்லிகா ஸ்ரீனிவாசன், “ஒரு தொழிலதிபராக, உயர்நேர்த்தியில் ஜெயஸ்ரீ பேரார்வத்துடன் நம்பிக்கை கொண்டிருந்தார். ஜெயஸ்ரீ என்றாலே செயல்நேர்த்தி என்று குறிப்பிடலாம். தாராள மனதுள்ளவராக பலராலும் அறியப்பட்ட அவர், தன்னைச் சுற்றி வாழ்ந்த நபர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான அர்த்தமுள்ள செயல் நோக்கங்களுக்கு மனமுவந்து, தாராளமாக ஆதரவளித்திருக்கிறார். பெண்களின் கல்வி மற்றும் அவர்களது தொழில்முறை சார்ந்த வாழ்க்கைப்பணி விருப்பங்களில் முன்னேற்றம் காணவேண்டும் என்ற நோக்கத்தின் மீது ஜெயஸ்ரீ தீவிர ஆர்வமும், பொறுப்புறுதியும் கொண்டிருந்தார். அவர் எப்பொழுதும் தான் கல்வி பயின்ற ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியுடன் அன்பும், மரியாதையும் கலந்த ஒரு வலுவான பிணைப்பினை கொண்டிருந்தார். இந்த மிக நவீன டிஜிட்டல் மையம், அவர் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டிய இலட்சியத்தையும், ஆர்வத்தையும் பிரதிபலிக்கிறது மற்றும் அவரது நினைவைப் போற்றும் வகையில் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது” என்று கூறினார்.

ஜெயஸ்ரீ வெங்கட்ராமன் டிஜிட்டல் கற்றல் மற்றும் ஆராய்ச்சி மையத்தின் கற்றல் அலகுகளின் கீழ்ககண்ட முதல் தொகுப்புகள் இத்தொடக்கவிழா நிகழ்வின்போது அறிமுகம் செய்யப்பட்டன: (i) வணிக பகுப்பாய்வு (ii) நிழற்படக் கலையில் படைப்புத்திறனைப் பெறுதல், (iii) வீடியோ உருவாக்கம் & தொகுப்பு மற்றும் ஹோஸ்டிங் & லைவ் ஸ்ட்ரீமிங்.

பல்துறை திறனுள்ள இந்த உயர் தொழில்நுட்ப மையம், மாணவிகளை கல்லூரி வளாகத்திலிருந்து, கார்ப்பரேட் உலகிற்கு நுழைவதற்கு தேவையான திறன்களை தயார் செய்யும் வகையில் கற்றல் முறைகளை வழங்குகிறது.

### கல்வி சார் இலக்கை எட்ட...

ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள டிஜிட்டல் முறையில் முன்னெடுக்கப்படும் இந்த ஆராய்ச்சி மையம், கல்விசார் இலக்குகளை திறம்பட எட்டுவதற்கான இக்கல்லூரியின் முயற்சிகளை மேலும் வலுவாக்குவதோடு கல்லூரியின் மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகப்பெரிய அளவில் சிறப்பான திறன்களையும், பலன்களையும் வழங்கும்.